RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-89 | 06 ஏப்ரல் ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



தமிழ்நாடு முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் நீலகிரியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். உடன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, உள்ளார்.

## 9.69% பொருளாதார வளர்ச்சி!: முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஏப்.6

2024 25ஆம் ஆண்டில் தமிழ்நாடு 9.69% உண்மை வளர்ச்சி வீதத்துடன் இந்தியாவிலேயே மிக அதிக வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு சார்பில் வெளி யிடப்பட்டிருக்கும் அறிக்கை: 202425ஆம் ஆண்டில் தமிழ்நாடு 9.69% உண்மை வளர்ச்சி வீதத்துடன் இந்தியாவிலேயே மிக அதிக வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. மேலும், கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்தமிகஉயர்ந்த வளர்ச்சி வீதம் இதுவேயாகும்.

நிலையான விலைமதிப்பின்படி (அடிப்படை ஆண்டு: 2011 12), 202324ஆம் ஆண்டில் ரூ.15,71,368 கோடியாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (நிஷிஞிறி), 2024 25ஆம் ஆண்டில் ரூ.17,23,698 கோடியாக உயர்ந்துள்ளதாக ஒன்றியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் இணையதளத்தில் வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன் 2017-18ஆம் ஆண்டில் அதிக வளர்ச்சி வீதம் 8.59% பதிவாகியுள்ளது. 2020 21ஆம் ஆண்டில் கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் குறைந்தபட்சமாக 0.07% எனப் பதிவாகியது. இக்காலகட்டத்தில் பல மாநிலங்கள் எதிர்மறை



வளர்ச்சியினைக் கொண்டிருந்த நிலையில், தமிழ்நாடு குறைந்தபட்சம் நேர்மறை வளர்ச்சியினைக் கொண்டிருந்தது.

உண்மை வளர்ச்சி வீதம் என்றால் என்ன?: பணவீக்கத்தைக் கணக்கில் கொள்ளாமல் மதிப்பிடப்படும் வளர்ச்சி வீதமே உண்மை வளர்ச்சி வீதம் ஆகும். பணவீக்கத்தையும் கணக்கில் கொண்டு மதிப்பிடப்படும் வளர்ச்சி வீதமே பெயரளவு வளர்ச்சி வீதம் ஆகும். 2024 25 ஆம் ஆண்டு தமிழ்நாடு 14.02 சதவீதம் பெயரளவு வளர்ச்சி வீதத்தினைப் பெற்று இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது.

ஒன்றியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் இணையதளத்தில் குஜராத், பிஹார், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட 14 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் 202425 ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி வீதத் தரவுகள் பதிவேற்றம் செய்யப்படவில்லை. தமிழ்நாடு அரசு முதன்முதலாக மார்ச் 2025 இரண்டாம் வாரத்தில் வெளியிட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் முன்கணிப்பு செய்யப்பட்ட வளர்ச்சி வீதத்துடன், ஒன்றிய அமைச்சகம் வெளியிட்ட உண்மை வளர்ச்சி வீதம் ஒத்துப்போவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்தப் பொருளாதார ஆய்வு 8% க்கும் மேல் வளர்ச்சி இருக்கும் எனக் கணித்திருந்தது.

பயிர்த் தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவை முதன்மைத் துறையின் முக்கியமான பிரிவுகளாகும். இவ்விரண்டு பிரிவுகளும் எதிர்பார்த்த அளவுக்கு வளர்ச்சி யினைப் பெற்றிருக்கவில்லை. பயிர்த் தொழில் 5.93% வளர்ச்சியினையும் கால்நடை வளர்ப்பு 3.84 சதவீதம் பதிவு செய்துள்ளன.

சென்னைப் பொருளியில் நிறுவனத் தின் முன்னாள் இயக்குநரான முனைவர். கே.ஆர். சண்முகம், 2021 22 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 8% அல்லது அதற்கு மேலான வளர்ச்சி யினைத் தமிழ்நாடு எய்தி வருவதாகத் தெரிவிக்கிறார். எதிர்வரும் ஆண்டுகளில் இந்த 9.7% என்ற வளர்ச்சி வீதத்தினைத் தக்கவைத்துக் கொண்டால், 2032 33 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கினை அடையும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக இது குறித்து தமிழக முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில், "9.69% வளர்ச்சியுடன் தமிழ்நாடு இந்தியாவிலேயே மிக அதிக வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளது. அதுவும் பாலின சமத்துவம், அனைத்துப் பகுதிகளுக்கும் சமமான வளர்ச்சி என அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில் தொடர்ந்து கவனம் செலுத்தி இந்தச் சாதனையை நாம் எட்டியுள்ளோம் என்பதுதான் மிகவும் பாராட்டுக்குரியது.

அடிப்படைகளில் உறுதி, நிலையான நிர்வாகம், தெளிவான தொலைநோக்கு ஆகியவற்றைக் கொண்டு நம் மாநிலம் மற்றும் மக்களின் எதிர்காலத்தை திராவிட மாடல் வடிவமைத்து வருகிறது. ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் எனும் நம் பேரிலக்கை நோக்கி வலிமையோடும் உறுதியோடும் விரைந்து கொண்டிருக்கிறோம்" எனத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மோடி ஆட்சியில் 'தாமரை' மக்களின் நம்பிக்கை சின்னமாக உள்ளது: பாஜக நிறுவன நாளில் அமித் ஷா பேச்சு

புது டெல்லி: ஏப்.6

நாட்டு மக்களின் மனங்களில் தாமரை நம்பிக்கையின் சின்னமாக உள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறியுள்ளார். பாஜகவின் நிறுவன தினத்தை முன்னிட்டு கட்சியினருக்கு அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார். பாஜகவின் நிறுவன தினத்தை முன்னிட்டு கட்சியினருக்கு அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் பகிர்ந்துள்ள பதிவில், "பிரதமர் மோடி தலைமையிலான ஆட்சியினால் இன்று நாட்டு மக்களின் மனதில் 'தாமரை' நம்பிக்கையின் சின்னமாக விளங்குகிறது. கடந்த காலங்களில் பாஜக செய்த சேவை, பாதுகாப்பு நடவடிக்கை மற்றும் கலாச்சார விழிப்புணர்வு மாதிரியான பணிகள் வரும் நாட்களில் மைல்கற்களாக மாறும்.

கோடான கோடி பாஜக தொண்டர்கள், கட்சியில் கருத்தியல் உறுதிப்பாட்டை பின்பற்றி தேசத்தைக் வலிமையாக கட்டியெழுப்புவதில் தொடர்ந்து பங்களிப்பார்கள். நமது கட்சி எளிய மக்கள் மற்றும் பெண்களின் நலனை உறுதி செய்துள்ளது. சட்டப்பிரிவு 370ஐ ரத்து செய்துள்ளோம். அயோத்தியில் ராமர் கோயில் கட்டி உள்ளோம். இப்படி தேசத்தின் நலன் சார்ந்து நமது அமைப்பின் இயக்கம் உள்ளது.

கடந்த 40 ஆண்டுகளில் ஒரு கட்சி எப்படி இயங்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக பாஜக விளங்குகிறது. நாட்டில் உள்ள எளிய மக்களுக்கு தேவையான வீடு, உணவு, சுகாதாரம் போன்றவற்றை வழங்கியுள்ளது. விவசாயிகளின் நலனிலும் கவனம் செலுத்தி வருகிறது." என அமித் ஷா அதில் கூறியுள்ளார்.

கடந்த 1980, ஏப்ரல் 6ல் பாஜக நிறுவப்பட்டது. ஜன சங்கம் பாஜகவின் தொடக்கத்துக்கு அடிப்படை. 1977ல் எமர்ஜென்சிக்கு பிறகு ஜன சங்கம் ஜனதா கட்சி உடன் இணைந்தது. ஆர்எஸ்எஸ் அமைப்புடன் ஏற்பட்ட முரண் காரணமாக ஜனதா கட்சியில் இருந்து வெளியேறிய ஜன சங்க உறுப்பினர்கள் பாரதிய ஜனதா கட்சியை நிறுவினர்.

அந்த கட்சியில் இருந்து வாஜ்பாய் மற்றும் நரேந்திர மோடி என இதுவரை இரண்டு பிரதமர்கள் நாட்டுக்காக பணியாற்றி உள்ளனர். 1996, 1998, 1999 ல் மக்களவை தேர்தலில் அதிக உறுப்பினர்கள் கொண்ட கட்சியாக அறியப்பட்டது. 2014, 2019 மற்றும் 2024 மக்களவை தேர்தலில் வெற்றி பெற்று மத்தியில் ஆட்சி அமைத்துள்ளது.

## தமிழக பாஜக தலைவர் புதிய பாஜக தலைவரை நியமிக்க முடிவு

சென்னை ஏப்.6

தமிழக பாஜ தலைவர் அண்ணாமலையை வருகிற 9ம் தேதி மாற்றி, அதற்கான அறிவிப்பை வெளியிட பாஜ மேலிடம் திட்டமிட்டுள்ளது.

தமிழக பாஜ தலைவரை 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றுவது வழக்கம் பெரும்பாலும் 2 முறை ஒருவரை தலைவராக நியமிப்பது இல்லை. அந்த வழக்கப்படி அண்ணாமலையின் பதவிக்காலம் முடிந்து விட்டது. இதனால் அவரது பதவிக் காலத்தை மீண்டும் நீட்டிக்கலாமா அல்லது புதிய தலைவரை நியமிக்கலாமா என்று டெல்லி மேலிடம் ஆலோசனை நடத்தி வந்தது. இந்நிலையில்தான் அண்ணாமலையை மாற்றினால் கூட்டணிக்கு தயார் என்று எடப்பாடி பழனிசாமி, உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் தெரி வித்தார். அதை தொடர்ந்து அண்ணாமலையை மாற்ற அமித்ஷா முடிவு செய்தார் இதற்காக யாரை நியமிக்கலாம் என்று ஆலோசனை நடத்தினார் கடைசியாக நயினார் நாகேந்திரனை மாநில தலைவராக முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. மாநில தலைவரை டெல்லி மேலிடம் முடிவு செய்தாலும், மாநில நிர்வாகிகளுடன் ஆலோசனை



நடத்துவது வழக்கம்.

அந்த ஆலோசனையில் அவரை தலைவராக்கலாம், இவரை தலைவராக்கலாம் என்று பல்வேறு கருத்துக்கள் எழுந்தாலும், மேலிடம் யாரை தலைவராக்கலாம் என்று கருதுகிறதோ அவர்களைத்தான் அறி விப்பார்கள். அதன்படி, பிரதமர் மோடி நாளை ராமேஸ்வரம் வருகிறார்.

இதனால் மோடி வரும் நேரத்தில் மாநில தலைவரை மாற்றினால் நன்றாக இருக்காது என்று அமித்ஷா கருதினார். இதனால் அமித்ஷா உத்தரவுப்படி வருகிற 7, 8ம் தேதிகளில் மாநில நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நடக்கிறது.

இந்த கூட்டத்தில் ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜிஜூ கலந்துகொள்கிறார். கூட்டத்திற்கு பிறகு தனது அறிக்கையை டெல்லியிடம் 9ம் தேதி வழங்குகிறார். ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவின்படி 9ம் தேதி புதிய மாநில தலைவர் அறிவிப்பு வெளியாகும் என்று பாஜ வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழக மாநில தலைவர் அறிவிப்போடு சேர்த்து, மேலும் 13 மாநிலங்களுக்கு புதிய தலைவர்கள் அறிவிக்கப்படுகின்றனர்.

தமிழகத்தை பொறுத்தவரை புதிய மாநில தலைவராக நயினார் நாகேந்திரன் நியமிக்கப்படுவார் என்றும், அதிமுகவுடன் கூட்டணி அமைப்பதற்காகவே இந்த மாற்றம் என்றும் கூறப்படுகிறது. மாநில தலைவர் மாற்றம் நிகழ்ந்தவுடன் கூட்டணி குறித்த அறிவிப்பு முறைப்படி வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக செய்தியாளர்களைச் சந்தித்த அண்ணாமலை நா தழுதழுத்தபடியே அந்த பேட்டியை அமைத்துக் கொண் டார். அந்த பதவி வெங்காயம் போன்றது. உரிக்க உரிக்க ஒன்றும் இல்லாதது என்று தெரிவித்தார். ஆனால் அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவரது நா தழும்பியதைப் பார்க்க முடிந்தது.

ஒரு வேலையும் செய்யாமல் வெறும் பேட்டிகளின் மூலமாகவே மீடியா வெளிச்சத்தில் இருப்பது, பலவித கேமிராக்களின் புடைசூழ வருவது என்று ஒருவாறாக ஜாலியாக வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்த அவருக்கு இந்த புதிய அறிவிப்பு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பது மட்டும் நிச்சயம்.

## பகுதி நேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்திட வேண்டும்! பாமக தலைவர் ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, ஏப்.6

பகுதிநேர சிறப்பாசிரியர்களின் கோரிக்கையை ஏற்க மறுப்பது அநீதி. திமுகவின் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் அவர்களை பணி நிலைப்பு செய்ய வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறையில் 13 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வரும் பகுதிநேர ஆசிரியர்கள், தங்களுக்கு பணி நிலைப்பு வழங்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு தனித்தனியாக கோரிக்கை மனுக்களை அனுப்பியிருந்த நிலையில், அவை அனைத்தும் தள்ளுபடி செய்யப்படுவதாகவும், அவர்களுக்கு பணி நிலைப்பு வழங்க முடியாது என்றும் தமிழக அரசு அறிவித்திருக்கிறது.

பகுதிநேர ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கையைக் கூட ஏற்க தமிழக அரசு மறுப்பது நியாயமற்றதாகும். பகுதி நேர ஆசிரியர்களின் முதன்மைக் கோரிக்கை அவர்களுக்கு பணி நிலைப்பு வழங்கப்பட வேண்டும் என்பதுதான். அரசுப் பள்ளிகளில் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஓவியம், கணினி, தையல், உடற்கல்வி உள்ளிட்ட பாடங்களை கற்றுத்



தருவதற்காக 2012ம் ஆண்டில் ரூ.5 ஆயிரம் ஊதியத்தில் அமர்த்தப்பட்ட அவர்களுக்கு, இன்று வரை பணிநிலைப்பு வழங்கப்படவில்லை.

கடந்த 13 ஆண்டுகளில் அவர்களுக்கு ரூ.7,500 மட்டுமே ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. பாமகவின் தொடர் வலியுறுத்தல் காரணமாகத்தான் இதுவும் சாத்தியமானது. பணி நிலைப்பு வேண்டி பத்தாண்டுகளுக்கும் மேலாக பகுதிநேர ஆசிரியர்கள் அறவழியில் போராடி வருகின்றனர். ஆனால், அவர்களின் கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை.

திமுக ஆட்சிக்கு வந்தால் பத்தாண்டுகளுக்கும் மேலாக பணி செய்து வரும் பகுதி நேர ஆசிரியர்கள் பணி நிலைப்பு செய்யப்படுவார்கள் என்பது திமுகவின் தேர்தல் அறிக்கையில் 181 ஆம் வாக்குறுதியாக அளிக்கப்பட்டிருந்தது. திமுக ஆட்சிக்கு வந்துநான்காண்டுகள் நிறைவடைய உள்ள நிலையில், அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று தான் பகுதி நேர ஆசிரியர்கள் கோருகின்றனர்.

அதை நிறைவேற்ற தமிழக அரசு தயங்குவது ஏன்? தமிழக அரசு வழங்கும் மிகக் குறைந்த ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு 13 ஆண்டுகளாக பணியாற்றி வரும் பகுதி நேர ஆசிரியர்களின் பலர், வேறு பணிகளுக்கு செல்வதற்கான வயது வரம்பை கடந்துவிட்டனர். அதைக் கருத்தில் கொண்டு மனித நேய அடிப்படையிலும், வாக்குறுதியை நிறைவேற்றும் நேர்மையுடனும் அவர்களுக்கு பணி நிலைப்பு வழங்குவதுதான் அறமாக இருக்கும்.

பகுதி நேர ஆசிரியர்களுக்கு பணி நிலைப்பு வழங்குவதால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.450 கோடி மட்டுமே கூடுதலாக செலவாகும். இதனால் 12 ஆயிரம் குடும்பங்கள் அடையும் பயனுடன் ஒப்பிடும் போது இது ஒரு பொருட்டல்ல. எனவே, தமிழக அரசு இந்த கோரிக்கையை கனிவுடன் ஆய்வு செய்து பகுதி நேர ஆசிரியர்களை பணி நிலைப்பு செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நீலகிரியில் நடைபெற்ற அரசு விழாவில், 494 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் 1703 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, ரூபாய் 130 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 56 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், பொதுப்பணித் துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சாய்ராம் இன்ஸ்டிடியூட் அப் டெக்னாலஜி கல்லூரியில் பட்டமளிப்பு விழாவில் 35 லட்சம் மதிப்பிலான தங்க பதக்கம் வழங்கி கவுரவிப்பு




கன்னியாகுமரி ஏப்.6

நாகர்கோயில் மாநகராட்சி 3 வது வார்டு மேலப் பெருவிளை ஸிசி சர்ச் அருகில் சாலை ஓரமாக பல நாட்களுக்கு முன்பு குடிநீர் குழாய் பழுதுக்காக தோண்டப்பட்டு அதனை மூடப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

அந்த பகுதியில் பள்ளி மாணவ மாணவிகள் தினமும் டியூசன் வருவது வழக்கம்

இரவு நேரங்களில் பள்ளம் இருப்பது தெரியாமல் விபத்துக்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

எனவே மாநகராட்சி அதிகாரிகள் இதனை உடனடியாக மூட வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு இதுபோல குடிநீர் குழாய்க்காக தோண்டப்பட்ட குழியில் இளைஞர் ஒருவர் இருசக்கர வாகனத்தோடு விழுந்தது குறிப்பிடத்தக்கது.

மாநகராட்சி அதிகாரிகள் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருக்க கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நாகர்கோயில் குடிநீர் குழாய் பழுதுபார்க்க தோண்டப்பட்ட குழி மூடப்படாத அவலம்



கன்னியாகுமரி ஏப்.6

நாகர்கோயில் மாநகராட்சி 3 வது வார்டு மேலப் பெருவிளை ஸிசி சர்ச் அருகில் சாலை ஓரமாக பல நாட்களுக்கு முன்பு குடிநீர் குழாய் பழுதுக்காக தோண்டப்பட்டு அதனை மூடப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

அந்த பகுதியில் பள்ளி மாணவ மாணவிகள் தினமும் டியூசன் வருவது வழக்கம்

இரவு நேரங்களில் பள்ளம் இருப்பது தெரியாமல் விபத்துக்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

எனவே மாநகராட்சி அதிகாரிகள் இதனை உடனடியாக மூட வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு இதுபோல குடிநீர் குழாய்க்காக தோண்டப்பட்ட குழியில் இளைஞர் ஒருவர் இருசக்கர வாகனத்தோடு விழுந்தது குறிப்பிடத்தக்கது.

மாநகராட்சி அதிகாரிகள் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருக்க கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழகத்திலேயே 35 நாட்கள் நடைபெறும் குன்னூர் தந்தி மாரியம்மன் கோவில் சித்திரை திருவிழா துவங்கியது



குன்னூர், ஏப்.6

நீலகிரி மாவட்டம் தமிழகத்திலேயே 35 நாட்கள் நடைபெறும் சித்திரை திருவிழா குன்னூரில் நேற்று தொடங்கியது.குன்னூர் தந்தி மாரியம்மன் கோவில் சித்திரை திருவிழா நேற்று துவங்கியது. இதில் ஆழ்வார்பேட்டை ராமர் கோவிலில் இருந்து பக்தர்கள் பால் குடங்களுடன் ஊர்வலமாக தந்தி மாரியம்மன் கோவில் வந்தனர்.பின்னர் அம்மனுக்கு அபிஷேக அலங்கார பூஜை நடந்தது.இரவு எட்டு மணிக்கு கொடியேற்ற விழா நடந்தது. இதில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர். இதனை அடுத்து சிறப்பு நிகழ்ச்சிகள் மற்றும் பூஜைகள் நடைபெறுகிறது,இதில் முக்கிய நிகழ்ச்சிகளாக வரும் 13ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பூ குண்டம் இறங்குதல்,15 ம் தேதி தேர் வடம் பிடித்தல் நிகழ்ச்சி, பதினெட்டாம் தேதி முத்து பல்லக்கு நிகழ்ச்சியும்,19ம் தேதி நகராட்சி சார்பில் புஷ்ப பல்லக்கு ஊர்வலம், உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. விழா காலங்களில் ஒவ்வொரு சமூகத்தினர் சார்பிலும்சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதுடன்,கலை நிகழ்ச்சி மற்றும் பாட்டுக் கச்சேரிகளும், வான வேடிக்கைகளும் நடக்கிறது. மேலும் அடுத்த மாதம் ஒன்பதாம் தேதிவிழா கொடி இறக்க நிகழ்ச்சியும்,மறு பூசையும் நடக்கிறது. அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் தந்தி மாரியம்மன் கோவில் திருவிழா நிகழ்ச்சிகளை அறங்காவலர் குழுவினர் மற்றும் அலுவலர்கள் இணைந்து நடத்துகின்றனர். கடந்த ஆண்டு வரை சித்திரை திருவிழா அழைப்பிதழில் நாள்தோறும் முன்னின்று நடத்தும் சமூகத்தாரின் பெயர்கள் இடம் பெற்றிருந்தது. ஆனால் இந்த ஆண்டு அறநிலை துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள நோட்டீஸில் இந்த அமைப்பின் பெயரும் இல்லாமல் நிகழ்ச்சிகள் குறித்து மட்டுமே குறிப்பிட்டுள்ளனர்.

# புகழ் பெற்ற வேலூர் வி.ஐ.டி.யில் பல்கலைக்கழக தின விழா மற்றும் விளையாட்டு விழா



வேலூர் ஏப்.6

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடியில் புகழ் பெற்ற வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக தின விழா மற்றும் ஆண்டு விளையாட்டு வி.ஐ.டி பல்கலைக்கழக வேந்தர் ஜி.விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது. விஜடி துணைத் தலைவர்கள் சங்கர் விசுவநாதன், சேகர் விசுவநாதன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி சுந்தரேஷ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். மேலும், கவுரவ விருந்தினராக ஹெட் கார்ப்பரேட் சென்டர் லார்சன் அண்ட் டுப்ரோ லிமிடெட் மூத்த துணைத் தலைவர் ஆர். கணேசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இவ்விழாவில் விஜடி வேந்தர் ஜி.விசுவநாதன் பேசியதாவது:

இந்த விழாவில் 3400 மாணவர்களுக்கு ரூ. 1.4 கோடி மதிப்பிலான கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. மாணவர்கள் 100 சதவீதம் வருகை புரிய வேண்டும். நான் லயோலா கல்லூரியில் படித்தேன். இளங்கலை 2 வருடம், முதுகலை 2 வருடம் என 4 வருடம் படித்தேன். நான் படித்த 4 வருடங்களும் அனைத்து நாட்களும் கல்லூரிக்கு வருகை புரிந்தேன். வி.ஐ.டி பல்கலைக்கழகம் 15 ஆசிரியர்களுடன் தொடங்கப்பட்டது. அப்போது ஒரு மாதத்திற்கான செலவு ரூ. ஒரு லட்சம் வரை தான் இருந்தது. எனது தந்தை சிறு விவசாயி. விளிம்புநிலை மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கு உயர்கல்வி கனவாக உள்ளது. கல்விக்கு அதிக செலவழிக்கும் நாடுகளில் இந்தியா பின் தங்கி உள்ளது. இந்திய அளவில் கல்விக்கு அதிகம் செலவழிக்கும் மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடத்திலும் கேரளா இரண்டாவது இடத்திலும் பிகார் கடைசி இடத்திலும் உள்ளது. மத்திய, மாநில அரசுகள் கல்விக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும். நாம் வளர்ந்து வரும் நாடாக இருக்கிறோம் . அனைவருக்கும் கல்வி இருந்தால் வளர்ந்த நாடாக மாறும், சீனாவை விட மக்கள் தொகையில் நாம் முன்னேறி இருக்கிறோம் . அதனைப் போல கல்வியில் முன்னேற வேண்டும். உயர்கல்வி அனைவருக்கும் கிடைக்க வேண்டும் . பில்லியனர் பட்டியலில் அமெரிக்கா முதல் இடத்திலும் சீனா இரண்டாவது இடத்திலும் இந்தியா மூன்றாவது இடத்திலும் உள்ளது . இந்தியாவில் 25 பில்லியனர் உள்ளனர். கல்வி மற்றும் மொழிகளில் அடிக்கடி சர்ச்சை எழுகிறது, கல்வியில் சர்ச்சை இருக்கக் கூடாது, வேலூர் விஜடியில் அனைவருக்கும் உயர்கல்வி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. விஜடி பேராசிரியர்கள் ஊழியர்கள் ஒருநாள் சம்பளத்தை இந்த திட்டத்திற்கு வழங்கிவருகின்றனர். ஏழைகள் இல்லாத மாவட்டமாக வேலூரை உருவாக்க வேண்டும். கல்லாமை ஒழிந்தால் தான் இல்லாமை ஒழியும். கல்வி அனைவருக்கும் கிடைத்தால் ஏழைகளே இந்தியாவில் இருக்க மாட்டார்கள். விஜடியில் 44 ஆயிரம் மாணவர்கள் படிக்கின்றனர். 15 மொழி பேசும் மாணவர்கள் இங்கு உள்ளனர். 70 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் இங்கு படிக்கின்றனர் என பேசினார்.

சிறப்பு விருந்தினர் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி சுந்தரேஷ் பேசியதாவது: வேலூர் விஜடி தொடங்கி 40 ஆண்டுகள் ஆகிறது ஒரு தனிமனிதரின் உழைப்பே இந்த வி.ஐ.டி. விஜடி வேந்தர் கல்விக்காக தன்னை அர்ப்பணித்து செயலாற்றி வருகிறார். மாணவர்கள் அரசியல் தொழில்துறை உள்ளிட்ட துறைகளுக்கு செல்கின்றனர். கல்வியின் அடிப்படை நோக்கமே அறிவும் பண்புகளும் தான், இந்த இரண்டும் தான் மாணவர்களை உயர்த்தும்... கற்றால் தான் அறிவு கிடைக்கும்... விளையாட்டு கல்வியின் ஒரு பகுதியாக உள்ளது. தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் வரவேண்டும். தோல்விகளில் இருந்து தான் அனுபவம் கிடைக்கிறது. கடினமாக உழைக்க வேண்டும். ஐ.பி.எல் போட்டி அனைத்து தரப்பு மக்களையும் ஒருங்கிணைக்கிறது. தாத்தா, மகன், பேரன் என மூன்று தலைமுறையினர் ஒன்றாக அமர்ந்து கிரிக்கெட் பார்க்கின்றனர். எந்த வேலை பார்த்தாலும் அதில் திறம்பட செய்ய வேண்டும் என மார்ட்டின் லூதர்கிங் கூறுகிறார். அதைப் போல மாணவர்கள் திறமையுடன் முன்னேற வேண்டும். கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் இருந்தால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம் என பேசினார். இவ்விழாவில் நிர்வாக இயக்குனர் சந்தியா பெண்டா ரெட்டி, உதவி துணைத் தலைவர் காதம்பரி எஸ்.விசுவநாதன், துணை வேந்தர் காஞ்சனா பாஸ்கரன், இணை துணை வேந்தர் பார்த்தசாரதி மல்லிக், பதிவாளர் ஜெயபாரதி உட்பட பலர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# வேலூர், வி.ஐ.டி பல்கலைக்கழகத்தில் கல்வி உதவித்தொகை வழங்கும் விழா!!



வேலூர் ஏப்.6

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, புகழ்பெற்ற காட்பாடி வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தில், உயர்கல்வி பயில இருக்கும் அனைத்து ஏழை எளிய நடுத்தர மாணவ, மாணவிகள் உயர்க் கல்வி பெற கல்வி உதவித்தொகை வழங்கும் விழா வி.ஐ.டி வேந்தர் கோ. விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் அறக்கட்டளை நிர்வாகி மயிலாம்பிகை குமரகுரு சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் நிகழ்ச்சிக்கு வருகை புரிந்த விருந்தினர்கள் அனைவரையும் வரவேற்று கௌரவித்து சிறப்புரையாற்றினார்.

இதில் செயலாளர் ஜெ.லட்சுமணன், பொருளாளர் ஜவரிலால் ஜெயின், வெங்கடசுப்பு, மரு.நர்மதா அசோக், கேஎம்ஜி. ராஜேந்திரன், கே.எம்.தேவராஜ், என்.பாஸ்கரன், முனைவர். ரத்தின நடராசன், ருக்ஜி ராஜேஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி விழாவை சிறப்பித்தனர்.

இதில், வேந்தர் கோ. விசுவநாதன் பேசுகையில் இந்தியாவில் 788 மாவட்டங்கள் உள்ளது. இந்த மாவட்டங்களில் ஒரே ஒரு மாவட்டத்தில் தான் அனைவருக்கும் உயர்கல்வி செயல்பட்டு வருகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% கல்விக்கு செலவழிக்க வேண்டுமென முன்பு கோத்தாரி கமிஷன் கூறியதை தான் இப்போது புதிய கல்விக் கொள்கையில் சொல்கின்றனர். உயர்கல்வியில் நாம் பின்தங்கியுள்ளோம். நாம் வளர வேண்டும் என்றால் கல்வியில் வளர வேண்டும். கல்வியில் வளர்ந்தால் தான் பொருளாதாரத்தில் வளர முடியும். கல்வியில் ஓரளவு சிறந்த மாநிலம் வளர்ந்து விடும். எனவே, மத்திய, மாநில அரசுகள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து கல்விக்கு அதிகமாக செலவழித்தால் அதிகம் பேர் கல்வி பெற முடியும், ஏழை எளியவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் கல்வி கிடைக்கும்.

அரசு இலவச வேட்டி, சேலை, மிக்சி, கிரைண்டர் போன்றவற்றை வழங்குகிறது ஆனால் நாம் யாரும் இலவச கல்வி வேண்டும் என கேட்பதில்லை. அடிப்படை விழிப்புணர்வு கல்வியால் தான் கிடைக்கும் என சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கல்வியாளர் பி.கே.கிருஷ்ணராஜா வானவராயர் உதவித்தொகை வழங்கி பேசுகையில் மனிதன் மனது வைத்தால் எதையும் சாதிக்க முடியும் என சுவாமி விவேகானந்தர் கூறினார். நீ எதுவாக ஆக விரும்புகிறாயோ அதுவாகவே ஆவாய் என கூறப்படுகிறது. வாழ்க்கையில் வெற்றி பெற ஏற்கனவே வெற்றி பெற்ற மனிதர்களின் வாழ்க்கை சரித்திரத்தை படிக்க வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு மாணவனை தத்தெடுத்து கல்விக்கு பணம் செலவழிக்க வேண்டும். அந்தப் பணியைத்தான் அனைவருக்கும் உயர் கல்வி அறக்கட்டளை செய்து வருகிறது.

வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றால் முதலில் தேவைப்படுவது கனவு. உங்கள் மீது உங்களுக்கு நம்பிக்கை வர வேண்டும். கடினமாக உழைக்க வேண்டும். எனவே இளைஞர்கள் தங்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக கனவு கண்டு உழைக்காமல், நாட்டின் முன்னேற்றம் குறித்தும் கனவு கண்டும் உழைக்க வேண்டும். அனைத்து நாடுகளும் இந்தியாவை உற்று நோக்குகிறது. எனவே நாட்டின் வளர்ச்சிக்காக கனவு கண்டு உழைத்தால் நாம் வளர்ந்த நாடாக முன்னேறுவோம், அது உங்கள் கையில் உள்ளது என்று பேசினார்.

இந்த ஆண்டு 1182 மாணவர்களுக்கு ஒரு கோடியே 20 லட்சத்து 60 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்பட்டது. இதுவரை மொத்தமாக 9,878 மாணவர்களுக்கு 11 கோடி 86 லட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது என சிறப்புரையாற்றினர். இறுதியில் திட்ட துணை இயக்குநர் சுந்தரராஜ் நன்றியுரையாற்றி விழா நிறைவுபெற்றது.




கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில், உதவி ஆய்வாளரை உல்லாசத்திற்கு அழைத்த செவிலியர் உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டனர். வடசேரி காவல் நிலையத்தில் பணிபுரியும் உதவி ஆய்வாளர் அவர்கள் நீதிமன்ற சாலையில் சாதாரண உடையில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அங்கு நின்று கொண்டிருந்த 2 பெண்கள் மற்றும் ஒரு இளைஞர், உதவி ஆய்வாளரிடம், இளம்பெண்ணுடன் உல்லாசமாக இருக்க ஆயிரத்து 500 ரூபாய் தர வேண்டுமென கூறி, அப்பகுதியில் உள்ள வாடகை வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளனர். இதுகுறித்து உதவி ஆய்வாளர் அவர்கள் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்ததை அடுத்து மூவரும் தப்பியோட முயன்றனர். அப்போது அவர்களை போலீசார் மடக்கிப்பிடித்தனர். நெல்லை பணகுடியை சேர்ந்த இளம்பெண்ணை மீட்டு போலீஸ் நடத்திய விசாரணையில், பணத்தாசை காட்டி பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியது தெரியவந்தது.



கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் பயணியர் விடுதி சந்திப்பில் பொதுமக்களுக்கு இடையூறாக அமைந்திருக்கும் டாஸ்மாக் மதுக்கடையை அகற்ற கோரி குளச்சல் சட்டமன்ற தொகுதி இளைஞர் காங்கிரஸ் சார்பாக குளச்சல் பேருந்து நிலையம் அருகில் உள்ள காமராஜர் சிலை முன்பு வைத்து கண்டன ஆர்ப்பாட்டமானது மாநில பொதுக்குழு உறுப்பினர் லாரன்ஸ் அவர்கள் தலைமையில் குளச்சல் சட்டமன்ற தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஜேக்கப் முன்னிலையில் நடைபெற்றது.குமரி கிழக்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் #டைசன் மற்றும் திங்கள்நகர் பேரூராட்சி தலைவர் சுமன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றனர்.

# தேனி நாடார் சரசுவதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணி நியமன ஆணை வழங்கும் விழா





தேனி, ஏப்6

தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பல்வேறு நிறுவனங்களில் பணி நியமன ஆணைகள் பெற்ற மாணவியர்களுக்கு "பணிநியமன ஆணை வழங்கும் விழா" கல்லூரியின் கர்மவீரர் காமராஜர் கலையரங்கில் நடைபெற்றது. கல்லூரி செயலாளர் காசி பிரபு வரவேற்புரையாற்றினார். தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை தலைவர் ராஜமோகன் தலைமை தாங்கினார். உபதலைவர் கணேஷ் பொதுச்செயலாளர் ஆனந்தவேல் மற்றும் பொருளாளர் பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரியின் இணைச் செயலாளர்கள் செண்பக ராஜன், அருண், கல்லூரி முதல்வர் முனைவர் சித்ரா, துணை முதல்வர்கள் சுசீலாசங்கர். முனைவர் உமாகாந்தி, முனைவர் கிருஷ்ணவேணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரியின் துணை முதல்வர் முனைவர்.சரண்யா வேலைவாய்ப்பு முகாமை பற்றி விளக்கி பேசினார்.

கல்லூரி வேலைவாய்ப்பு துறை தலைவர் அகிலா வைஷ்ணவி வேலைவாய்ப் பிற்கான ஆணிடறிக்கையை வாசித்தார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கல்லூரியின் முன்னாள் மாணவி சாப்ட்வேர் என்ஜினியர் பூஜா ஏஜ/ எம்எல் அனலைஸ்ட், கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.அவர் பேசுகையில்

"நமது கல்லூரி மாணவியர்களின் அறிவை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல் அனைவரும் வேலைவாய்ப்பினை பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறது. அதற்காக பல்வேறு நிறுவனங்களிலிருந்து பயிற்சிகளுக்காகவும் வேலைவாய்ப்பிற்காகவும் வல்லுநர்கள்,பயிற்சியாளர்கள் அழைக்கப்பட்டு மாணவியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன என்றுரைத்தார்.

இன்றைய உலகில் வேலைவாய்ப்பு என்பது ஒரு மிக முக்கியமான தரமாக மாறியுள்ளது. கல்வி மட்டும் போதாது, வேலைவாய்ப்பு திறன் இருந்தால்தான் நாம் எதிர்காலத்தை வெற்றிகரமாக அமைத்துக்கொள்ள முடியும். சிறந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை பெற தொழில்துறை சார்ந்த அறிவு, பேசும் திறன், குழுவாக வேலை செய்யும் திறன், நேர மேலாண்மை, கம்ப்யூட்டர் அறிவு, ஆய்வகத் திறன், டேட்டா பகுப்பாய்வு போன்றவை முக்கியம், இவை அனைத்தையும் பயிற்சி வாயிலாக மட்டுமே வளர்த்துக் கொள்ள முடியும் " என்று பேசினார்.

பல்லேறு நிறுவனங்களில் பணிபுரிய 938 மாணவிகளுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியின் முடிவில் கல்லூரியின் வேலைவாய்ப்பு துறை ஒருங்கிணைப்பாளர் பிரியதர்ஷினி நன்றி கூறினார்.

# கோத்தகிரியில் பொதுமக்களை சந்தித்து கோரிக்கை மனுக்களை பெற்ற முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்





ஊட்டி ஏப்.6

நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நேரடியாக சென்று நலத்திட்ட பணிகளை கள ஆய்வு செய்து வருகிறார். மேலும் முடிவுற்ற வளர்ச்சிப் பணிகளை துவக்கி வைத்தும், புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் வருகிறார்.

இந்நிலையில், 2 நாட்கள் கள ஆய்வு பயணமாக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று நீலகிரி மாவட்டத்திற்கு சென்றுள்ளார். கோவையில் இருந்து சாலை மார்க்கமாக நீலகிரி மாவட்டத்திற்கு சென்றுள்ளார்.

நீலகிரி மாவட்டத்தின் கோத்தகிரியில் பொதுமக்களை சந்தித்த முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை மனுக்களை பெற்றார். பள்ளி மாணவிகள் வழங்கிய ரோஜா மலர்களை பெற்று கொண்டு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து கூறினார். மேலும், மக்கள் கூட்டத்தின்நடுவே சாலையில் 1 கிலோ மீட்டர் நடந்து சென்று வரவேற்பு நிகழ்ச்சியில் முதல் அமைச்சர் பங்கேற்றார்.

கோத்தகிரியில் நிகழ்ச்சிகளை நிறைவு செய்தபின் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஊட்டி செல்கிறார். அங்கு தமிழக அரசின் விருந்தினர் மாளிகையில் இரவுதங்குகிறார்.

அதன்பின்னர், நாளை காலை நடைபெறும் நிகழ்ச்சியில் ஊட்டி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார். ஊட்டி அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் விழாவில் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசுகிறார்.

பீகார் மாநிலத்தில் தேசிய அளவிலான சப் ஜூனியர் ஆண்கள் கபடி போட்டி கடந்த மார்ச் 27ம் தேதி முதல் 30ம் தேதி வரை நடைப்பெற்றது. இதில் 28 மாநிலத்தை சேர்ந்த அணிகள் கலந்து கொண்டது. தமிழகத்தை சேர்ந்த ஆண்கள் அணியும் பங்கேற்றன. இதில் தமிழகத்தை சேர்ந்த அண்ணா செலக்ட் கிளப் சார்ந்த அகரம் எம்.வினோத் அவர்களின் மகன் வி.வருண்ராஜ் செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் சார்பாக மாலை அணிவித்து பொன்னாடை போற்றி வாழ்த்துக்கள் தெரிவித்தனர் இதில் அமைச்சூர் கபடி கழகம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு அமெச்சூர் கபடி கழக தலைவர் எம்.சோலைராஜா, பொதுச் செயலாளர் ஏ.சபியுல்லா, செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழக தலைவர் பி.சிவமணி, செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழக செயலாளர் மு.வேல்முருகன் ஆகியோர் ஆலோசனைப்படி கபடி கழக துணைச் செயலாளர் ஏ.ஜான்சன் அவர்கள் தமிழ்நாடு அணிக்காக கலந்து கொண்டு விளையாடிக் கொண்டிருக்கும் வி.வருண்ராஜ் அவர்களுக்கு மாலை மற்றும் சால்வை அணிவித்து வாழ்த்துகளை தெரிவித்தனர்

# சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் ஐம்பெரும் விழா



சிவகங்கை, ஏப்.6

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் ஐம்பெரும் விழாவில் மூன்றாம் நாள் நிகழ்வாக நுண்கலை மன்ற விழா நேற்று கல்லூரியில் நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமி தலைமை வகித்து நுண்கலை மன்றத்தின் சார்பாக அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் சார்பாக பல்வேறு போட்டிகளில் பங்கேற்று கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்த மாணவர்களை பாராட்டிப் பேசினார். கல்லூரியின் நூண்கலை மன்ற உறுப்பினர் ஆங்கிலத் துறை உதவிப் பேராசிரியர் ஷர்மிளா வரவேற்புரை ஆற்றினார்.

நுண்கலை மன்ற ஒருங்கிணைப்பாளர் தமிழ் துறை இணைப் பேராசிரியர் செல்வமீனா ஆண்டறிக்கை வாசித்தார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் தேர்வாணையர் முனைவர் ஜோதிபாசு தான் கல்லூரியில் பயின்ற போது நுண்கலை மன்றத்தின் மூலம் பெற்ற வெற்றிகள் தான் தன்னை ஆராய்ச்சியிலும் உயர் கல்வியிலும் சாதிக்கத் தூண்டியது என்றும் கூறி நுண் கலை மனிதனை செம்மையாக்கும் என்று கருதியதால் தான் வள்ளல் அழகப்பர் இப் பல்கலைக் கழகத்தில் நுண்கலைத்துறை ஒன்றை உருவாக்கினார் என்றும் தன் சிறப்புரையில் விளக்கிக் கூறினார்.

பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்ற மாணவ மாணவியருக்கு சான்றிதழ்களும், பரிசுக் கோப்பைகளும் வழங்கப்பட்டன. நுண் கலை மன்ற உறுப்பினர் வணிகவியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் லட்சுமணக்குமார் நன்றி கூறினார்.

இவ்விழாவில் ஆசிரியர்களும், ஆசிரியர் களல்லாப் பணியாளர்களும் மாணவ, மாணவிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கலெக்டரின் உறவினர் என கூறி ரூ. 1 கோடி ரூபாய் லஞ்சம் பெற்றதாக போலீஸ் இன்ஸ்பெக்டர் நெப்போலியன் கைது

## தனிப்படை போலீசார் கன்னியாகுமரியில் விசாரணை



கன்னியாகுமரி ஏப்6

கன்னியாகுமரி , தக்கலை ஆகிய இடங்களில் போலீஸ் இன்ஸ்பெக்டராக பணிபுரிந்து வந்தவர் நெப்போலியன். இவர் தற்போது தர்மபுரியில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறார்.

இவர் ஒரு கோடி ரூபாய் லஞ்சம் பெற்றதாக கைது செய்யப்பட்டார். கும்பகோணத்தைச் சேர்ந்த ஆடிட்டர் ரவிச்சந்திரன் (68) என்பவர்,

கும்பகோணத்தில் ஆடிட்டராக பணியாற்றுகிறார். அவருக்கு குலசேகரநல்லூரில் 80 சென்ட் நிலம் உள்ளது. அரசு இதனை தடுப்பணை கட்டுவதற்காக கையகப் படுத்தியது.

நிலம் கையகப்படுத்தப்பட்ட பிறகு, 30 தேக்கும் மரங்களை வெட்டியதாக கிராம நிர்வாக அலுவலர் புகார் அளித்து, அரசு அதிகாரிகள் மரங்களை கைப்பற்றினர்.

நெப்போலியனின் மிரட்டல்.

இதற்குப் பிறகு, நெப்போலியன், தான் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் உறவினர் என்று பொய்யாக கூறியும் ஒரு குறிப்பிட்ட அமைச்சர் தனக்குநெருக்கமானவர் என்று கூறி "இந்த விவகாரத்தில் வழக்கு பதிவு செய்யாமல் தடுக்க சிபாரிசு செய்ய முடியும், அதற்கு ரூ.1 கோடி கொடுக்க வேண்டும்" என்று ரவிச்சந்திரனை மிரட்டியதாக கூறப்படுகிறது.

ரவிச்சந்திரன், மூன்று தவணைகளாக ரூ.1 கோடி கொடுத்துள்ளார். அதன் பிறகு, நெப்போலியன் மீண்டும் ரூ.1 கோடி கேட்டுள்ளார். இதனால் சந்தேகமடைந்த ரவிச்சந்திரன், தஞ்சாவூர் காவல் கண்காணிப்பாளர் க்கு புகார் அளித்தார்.

தஞ்சாவூர் மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளருக்கு புகார் அளித்ததை அடுத்து, மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் நெப்போலியனை தர்மபுரி டோல் பிளாசா அருகே கைது செய்து, தஞ்சாவூர் அழைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தஞ்சாவூர் அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், அவர் முந்தைய பணியிடங்களில் பல்வேறு பண மோசடிகளில் ஈடுபட்டிருக்கலாம் என்பதால், போலீசார் கன்னியாகுமரி , தக்கலை ஆகிய இடங்களில் விரிவான விசாரணை நடத்தி வருகின்றனர்.

கன்னியாகுமரியில் இரு குடும்பத்துடன் இவர் நெருங்கிய தொடர்பில் இருந்ததாக கூறப்படுகிறது. அந்த குடும்பத்தினர் பெயரில் சொத்துக்கள் வாங்கி குவித்து இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதன் அடிப்படையில் நேற்று கன்னியாகுமரி வந்த தனிப்படை போலீசார் அந்த வீட்டில் சோதனை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் தமிழக காவல் துறையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் வட்டத்தில் ஊரக வேளாண் அனுபவ திட்டத்தில் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவிகள் ஈடுபட்டுள்ளனர். மாணவி அம்ருதா மேனன் விதை நேர்த்திசெய்யும் முறை பற்றி விவசாயிகளுக்கு செய்து கட்டினார். நெல் தீவிரப்படுத்தல் முறை என்பது மகசூலை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு முறையாகும், அதே நேரத்தில் தண்ணீர், ஊட்டச்சத்துக்கள் மற்றும் உழைப்பின் தேவைகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. முக்கிய கொள்கைகள் முன்கூட்டிய நடவு, மாற்று ஈரமாக்குதல் மற்றும் உலர்த்துதல், பரந்த இடைவெளி, குறைக்கப்பட்ட நீர் பயன்பாடு மற்றும் கரிம உரங்கள். பாரம்பரிய முறையுடன் ஒப்பிடும்போது 25 30% வரை மகசூலை அதிகரிக்க முடியும் என்று தெரிவித்தனர்.

## 24 ஆண்டுகளுக்கு பிறகு வழுவூர் வீரட்டேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம்



மயிலாடுதுறை, ஏப்.6

மயிலாடுதுறை மாவட்டம்: வழுவூர் வீரட்டேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் 24 ஆண்டுகளுக்கு பிறகு நடைபெற்றது, தருமபுரம் ஆதீன மடாதிபதி உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர்.

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தாலுகா வழுவூரில் இந்து அறநிலைய ஆட்சித் தலைக்கு சொந்தமான 1500 ஆண்டுகள் பழமை வாய்ந்த இளங்கிளை நாயகி உடனுறை ஸ்ரீ கீர்த்திவாசர் ஆலயம் அமைந்துள்ளது வீரட்டேஸ்வரர் ஆலயம் என்று பக்தர்களால் அழைக்கப்படும் இந்த ஆலயம் தாருகாவனத்து முனிவர்கள் செருக்கை அடக்கி அவர்களால் ஏவி விடப்பட்ட யானை வடிவிலான அசுரனின் ஆடையாக இறைவன் அணிந்ததாக புராண வரலாறு தெரிவிக்கின்றது. இதனால் அஷ்ட விரட்ட தளங்களில் ஆறாவது ஆலயமாக இது போற்றப்படுகிறது. ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் 24 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று நடைபெற்றது இதனை முன்னிட்டு ஆறு கால யாகசாலை பூஜைகள் நடைபெற்றன. இன்று ஆறாவது கால யாகசாலை பூஜை பூர்ணாகுதியுடன் நிறைவு பெற்றதை தொடர்ந்து மங்கள வாத்தியங்கள் முழங்க புனித நீர் அடங்கிய கடன்கள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது. தருமபுரம் ஆதீன 27 வது மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

## தாராபுரத்தில் ஆதரவற்று இறந்த மூதாட்டி உடலை நல்லடக்கம் செய்த அப்துல் கலாம் அறக்கட்டளையினர்



தாராபுரம், ஏப்.6

திருப்பூர் மாவட்டம் மூலனூர் அருகே இறந்து போன மீனாட்சி வயது(60) என்பவரின் உடலை தாராபுரம் அரசு மருத்துவமனையில் கடந்த மூன்று நாட்களாக இறந்தவரின் உடலை பெற்றுக் கொள்ள உறவினர்கள் எவரும் முன் வராத காரணத்தினால் மூதாட்டியாரின் பிரேதத்தை உடல் கூறு ஆய்வு செய்து முடித்தனர். அதன் பின் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அறக்கட்டளையின் சார்பாக தாராபுரம் பழைய ஆற்றுப் பாலம் அருகில் உள்ள சுடுகாட்டில் நல்அடக்கம் செய்யப்பட்டது.

இதில் அறக்கட்டளை நிர்வாகிகள் அபுதாகிர்,டி.டெக்ஸ் சண்முகம், சமூக சேவகர் முனைவர் சிவசங்கர், உறுப்பினர்கள் தமிழ்ஈழம் ராஜேஷ், தாரைமணி,மூலனூர் காவலர்கார்த்திக், ஆகியோர்கள் முன்னிலையில் அம்மையார் உடலை நல்அடக்கம் செய்யப்பட்டு இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் வட்டத்தில் ஊரக வேளாண் அனுபவ திட்டத்தில் கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதியாண்டு மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். மாணவர்கள் அமரேசன், ரித்திஸ்பாபு, ஹேமசந்திரன், கண்ணன், தனசீலன், ஷரபத் அசன், சந்தோஷ்குமார், மதன் குமார். TNAU டானிக் பயன்படுத்தும் முறை பற்றி விவசாயிகளுக்கு செய்து காட்டினார். ஒரு மரத்திற்கு 30மிலி விதம் பயன்படுத்துவதன் மூலம் மரத்திற்கு கிடைக்கும் நன்மைகளை விளக்கினார்கள்

## தமிழ்நாடு மீன் பகிர்மான கழகம் மின் நுகர்வோர் குறை நீக்கும் முகாம்




பெரியகுளம், ஏப்.6

தேனி மாவட்டம் பெரியகுளம் தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் மின் நுகர்வோர்களின் குறை நீக்கும் முகாம் நகர் பெரியகுளம் பிரிவு அலுவலகத்தில் கோட்ட செயற்பொறியாளர் தலைமையில் நடைபெற்றது.மின் கட்டண குறைகள், மின்மீட்டர், குறைந்த மின்னழுத்தம், சேதமடைந்த மின் கம்பம் மாற்றுதல் உள்ளிட்ட புகார்களை தெரிவிக்கலாம் என செயற்பொறியாளர் பாலபூமி தெரிவித்தார். உடன் உதவி செயற்பொறியாளர் முத்துராமலிங்கம்,கிழக்கு உதவி செய்ற்பொறியாளர் பார்த்தசாரதி,ஆண்டிபட்டி மேற்கு உதவி செயற்பொறியாளர் முருகன் கலந்து கொண்டனர்.




கோவை உக்கடம் பகுதியில் எஸ்டிபிஜ கட்சியினர் வக்ஃபு சட்ட மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கையில் மெழுகுவத்தி ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் உள்பட 300க்கும் மேற்பட்ட எஸ்டிபிஜ கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டு கையில் மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன கோஷங்களை எழுப்பினர்.

## வஃக்ப் திருத்த சட்ட மசோதாவிற்கு எதிர்ப்பு கருப்புக் பேட்ஜ் அணிந்து பள்ளிவாசலில் தொழுகை நடத்தி ஆர்ப்பாட்டம்!

சிவகங்கை, ஏப்.6.,

சிவகங்கை தலைமை பள்ளிவாசலான வாலாஜா நவாப் ஜும்ஆ பள்ளிவாசலில் வஃக்ப் திருத்த சட்ட மசோதாவிற்கு எதிராக கருப்புக் பேட்ஜ் அணிந்துதொழுகையைநிறைவு செய்து பள்ளிவாசலுக்கு முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இஸ்லாமியர்கள் .



மத்திய அரசு நாடாளு மன்றத்தில் நிறைவேற்றியுள்ள வஃக்ப் வாரிய திருத்த சட்ட மசோதாவிற்கு பல்வேறு அரசியல் கட்சியினரும் அமைப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் இஸ்லாமியர்கள் கடுமையாக தங்களுடையகண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக வெள்ளிக்கிழமை சிறப்புத் தொழுகை நாளான பள்ளிவாசலில் தொழுகைக்காக வந்த இஸ்லாமியர்கள் கருப்பு பேஜ் அணிந்து தொழுகையை நிறைவு செய்து வாலாஜா நவாப் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக தலைவர் காஜா முஹைதீன் மற்றும் பள்ளிவாசல் தலைமை இமாம் முஹம்மது பிலால் அவர்கள் தலைமையில் பள்ளிவாசல் முன்பு சாலையில் நின்று வஃக்ப் திருத்த சட்ட மசோதாவுக்கு எதிராகவும் மத்திய அரசுக்கு எதிராகவும் கண்டன கோஷங்களை எழுப்பினார்கள் முன்னதாக காலை பள்ளிவாசல் முழுவதும் தங்கள் கண்டனத்தை தெரிவிக்கும் வரையில் கருப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தது

பள்ளிவாசலில் கருப்புக் கொடி கட்டப்பட்டிருந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் அதனை தொடர்ந்து இஸ்லாமியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் நேரு பஜார் பகுதியில் அரை மணி நேரத்துக்கு மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது .

## சில்வார்பட்டி ஊராட்சியில் 100 நாள் வேலை திட்டத்தில் முறைகேடு செயலர் மீது நடவடிக்கை எடுக்க கோரி திமுக சார்பில் மனு

தேனி, ஏப்.6




தேனி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துமாதவன் அவர்களிடம் நேற்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரியகுளம் வடக்கு ஒன்றிய துணைச்செயலாளர் வெங்கிடாசலம் மனு ஒன்று அளித்தார். அந்த மனுவில் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் சில்வார்பட்டி ஊராட்சியில் பணியாற்றி வரும் ஊராட்சி செயலர் வீரபத்திரன் என்பவர் 100 நாள் வேலை திட்டத்தில் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாகவும், அதாவது 100 நாள் வேலை திட்டத்தில் ஆட்களை பயன்படுத்தாமல் ஜே.சி.பி. போன்ற கனரக வாகனத்தை பயன்படுத்தி அதிக அளவில் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதாகவும் செயலரின் மகன், ஊராட்சி அலுவலகத்தில் கம்ப்யூட்டர் ஆபரேட்டராக தற்காலிக ஊழியராக பணியாற்றி வரும் நபர் உள்ளிட்ட பல்வேறு நபர்களின் பெயரில் பணிகள் நடைபெற்றதாக பொய்யாக கணக்கு எழுதி போலி பில் மூலம் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதாகவும், சில்வார்பட்டி ஊராட்சியில் வாட்டர்மேனாக பணிபுரிந்து வருபவர் தனது வயது ஆவணத்தை திருத்தம் செய்து தொடர்ந்து பணியாற்றி ஓய்வு பெற்ற வயதிலும் 60 வயதை கடந்தும் ஓய்வு இல்லாமல் பணியாற்றி வருவதாகவும், ஊராட்சி செயலர் உதவியுடன் இவைகளை நடந்துள்ளதாகவும் குற்றம்சாட்டி, ஊராட்சி செயலர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி பெரியகுளம் திமுக வடக்கு ஒன்றிய துணைச்செயலாளர் வெங்கிடாசலம் குறிப்பீட்டிருந்தார். மேலும் மனுவை பெற்ற ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது) முத்துமாதவன் ஊராட்சி துறை சார்ந்த அதிகாரிகளுக்கு அனுப்பி உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதி அளித்தார்.

## மயிலாடுதுறையில் வக்ஃபு சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து 200 க்கும் மேற்பட்ட தவெக நிர்வாகிகள் கண்டன ஆர்ப்பாட்டம்

மயிலாடுதுறை, ஏப்.6




வக்ஃபு சட்ட திருத்த மசோதாவை சமீபத்தில் மத்திய அரசு மக்களவையில் நிறைவேற்றியது, இதனை தொடர்ந்து மாநிலங்களவையிலும் இந்த வக்ஃபு சட்ட திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டு குடியரசு தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளது.,

இந்த சட்ட திருத்த மசோதாவிற்கு பல்வேறு அரசியல் கட்சியினரும் எதிர்ப்பு தெரிவித்து வரும் சூழலில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் கண்டன அறிக்கையை வெளியிட்டதுடன்., இன்று தமிழ்நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்த நிர்வாகளுக்கு உத்தரவு வழங்கினார்.

அதன்படி தமிழ்நாடு முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் தவெக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகின்றன.


இதன் ஒரு பகுதியாக மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை பழைய பேருந்து நிலையம் அருகே வக்ஃபுசட்டதிருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் குட்டி கோபிநாத் தலைமையில் 200க்கும் மேற்பட்ட தவெக நிர்வாகிகள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.,

சட்டத்திருத்த மசோதாவை ரத்து செய்ய வலியுறுத்தியும், மத்திய அரசுக்கு எதிராகவும் பதாதைகளை ஏந்தி, கண்டன கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர். கண்டன ஆர்ப்பாட்டத்தில் முகமது ஆசிப் ,பிரபஞ்சன் மனோகர், ரமேஷ், கமல், ரவி, ராஜா, வசந்த்,சந்தோஷ் ராஜ் குமார்,சரவணன், சதீஷ், ஹரிஷ் விக்கி,சதீஷ், சூர்யா உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள், மகளிர் அணியினர் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டவருக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் தட்டச்சர் பணிக்கான பணிநியமன ஆணையும் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலகில் பத்து சதவீத இட ஒதுக்கீடு அடிப்படையில் தேர்வானவருக்கு இளநிலை உதவியாளருக்கான பதவி உயர்வு ஆணையையும் மாவட்ட ஆட்சியர் திரு.ஹெச். எஸ்.ஸ்ரீகாந்த் இ.ஆ.ப அவர்கள் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) லதா உள்ளார்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் அனைத்துத்துறை அலுவலர்களுடான வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஆய்வுகூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் நடைபெற்றது.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன், மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் மகாராஜ், ஜெயசீலன் மாவட்ட நிலையிலான அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி கஸ்தூரிபாளையம் பகுதியில் பொதுமக்களின் 25 ஆண்டு கால கோரிக்கையாக வைத்த புதிய நியாய விலை கடை கட்டுவதற்கான கோரிக்கையை நிறைவேற்றி பூமி பூஜையை பேரூராட்சி மன்ற தலைவர் விஷ்வ பிரகாஷ் துவங்கி வைத்தார். நிகழ்விற்கு சுகாதார ஆய்வாளர் பரமசிவம் முன்னிலை வகித்தார். நிகழ்வில் உடன் வார்டு உறுப்பினர்கள், ஜே.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிறுவனர்கள் மற்றும் பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.

## சோழவந்தானில் திமுக சார்பில் பிகே. மூக்கையா தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



சோழவந்தான் ஏப். 6

பிகே.மூக்கையா தேவரின் 102 ஆவதுபிறந்தநாளை முன்னிட்டு சோழவந்தான் பேருந்து நிலையத்தில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு திமுக சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது சோழவந்தான் பேரூர் செயலாளர் வழக்கறிஞர் சத்திய பிரகாஷ் தலைமை தாங்கினார் வாடிப்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் பசும்பொன்மாறன் பேரூராட்சித் தலைவர் எஸ் எஸ் கே ஜெயராமன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர் இந்த நிகழ்ச்சியில் துணைத் தலைவர் லதா கண்ணன் பொதுக்குழு உறுப்பினர் ஸ்ரீதர் பேரூர் துணை செயலாளர்கள் ஸ்டாலின், கொத்தாளம் செந்தில்வேல் முன்னாள் பேரூர் செயலாளர் முனியாண்டி அவை தலைவர் தீர்த்தம் பிற்பட்டோர் நல வாரிய உறுப்பினர் பேட்டை பெரியசாமி பேரூராட்சி கவுன்சிலர்கள் கௌதம ராஜா சிவா மாவட்ட பிரதிநிதி சுரேஷ் கேபிள் ராஜா மாணவர் அணி எஸ் ஆர்.சரவணன் 6வது வார்டு பிரதிநிதி சங்கங்கோட்டை சந்திரன் செயலாளர் ரவி ராமநாதன் மாரிமுத்து செங்குட்டுவன் சக்கரவர்த்தி கண்ணதாசன் நூலகர் ஆறுமுகம் சங்கையா மற்றும் திமுகவினர் கலந்து கொண்டனர்

## கரூரில் புதிய வகுப்பறை கட்டிடம் திறந்து வைத்த சட்டமன்ற உறுப்பினர்



கரூர், ஏப்.6




கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சின்னசேங்கல் பகுதியில் செயல்படும் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களின் தேவைக்கேற்ப புதிய 8 வகுப்பறை கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வந்தது. இந்த பணிகள் நிறைவடைந்ததை முன்னிட்டு இன்று கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் சிவகாமசுந்தரி இன்று புதிய வகுப்புகளை திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றி வைத்துமாணவர்களின் பண்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் கட்டளை ரவிராஜா, பள்ளியின் தலைமை ஆசிரியர், பணிபுரியும் இருபால் ஆசிரியர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மாணவ மாணவியர், என ஏராளமானோர் கலந்து கொண்டு வகுப்பறைகள் கட்டிட திறப்பு விழாவை சிறப்பித்தனர். தொடர்ந்து மாணவ மாணவியரிடம் தமிழக அரசின் திட்டங்களையும்பள்ளிகளுக்காக செய்து வரும் நலத்திட்டங்களையும் சட்டமன்ற உறுப்பினர் சிவகாமசுந்தரி விரிவாக எடுத்துக் கூறினார். நிகழ்ச்சி நிறைவில் பள்ளியின் முன்பு அனைவரும் குழுப்புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161